JETIR.ORG ISSN: 2349-5162 | ESTD Year : 2014 | Monthly Issue
JOURNAL OF EMERGING TECHNOLOGIES AND INNOVATIVE RESEARCH (JETIR)
An International Scholarly Open Access, Peer-reviewed, Refereed Journal

# தொன்மைக் கோட்பாட்டு நோக்கில் ஜெயமோகன் படைப்புகள்

**முனைவர் பா.நாகஜோதி**
உதவிப்பேராசிரியை &தலைவர்
முதுகலை தமிழ்த்துறை ,
வே.வ.வன்னியப் பெருமாள் பெண்கள்
கல்லூரி , விருதுநகர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை
அலைபேசி -9750156669
மின்னஞ்சல் nagajothib@vvvcollege.org

**Abstract**

Myth is called Myth in English. The word 'myth' means fable, legend. The word ancient means ancient. Tolkappiyam says, "An ancient text is full of oldness. Myths are not refuges of lies." Abode of facts .Abode of ideas. Campbell is the historical treasure trove of desires, the whirlpool of memories. Mythology is an intensive term that is associated with religion, human nature in folk songs, social nature, psychoanalysis and art.

**Keywords:**

Terminology - Mythology - Mythology - Mythology - Interdisciplinary - Anthropology - Sociology - Psychology - Mythologies - Theories - Mahabharata - Mohanjadaro - Indus Valley Civilization - Kirathamurthy .

**முன்னுரை**

தொன்மத்தை ஆங்கிலத்தில் மித் என்று குறிப்பிடுவர். இந்த ‘மித்’ என்ற சொல்லுக்கு பழங்கதை, புராணக்கதை என்று பொருள்படுகிறது. தொன்மை என்ற சொல்லுக்கு பழமை என்று பொருளாகிறது. தொன்மையான உரையொடு புணர்ந்த பழமை மேற்றே” என்கிறது தொல்காப்பியம்.தொன்மங்கள் பொய்ம்மைகளின் புகலிடங்கள் அல்ல. உண்மைகளின் இருப்பிடம் .கருத்துகளின் வாழ்விடம். ஏண்ணங்களின் வரலாற்றுப் பெட்டகம்.நினைவுகளின் சுழி முனை என்பர் கம்பெல். மேலும் அரிஸ்டாட்டில் தொன்மம் என்பது இலக்கியங்களின் ஆன்மாவாகும் என்கிறார் (ப-2- **தொன்மம் - கதிர்மகாதேவன்**-1989). தொன்மங்களை அதிகமாக எடுத்தாளும் இலக்கியங்கள் பழம்பெரும் இலக்கியங்கள் எனலாம். இன்றைய புது

எழுத்தாளர்கள் பழமைக்கும், புதுமைக்கும் பாலம் போடுவது போல படைப்புகள் வெளியிடுகின்றனர். தற்கால மக்களின் வாழ்வியல் சிக்கல்களை விளக்குவதற்காக தொன்மங்களை ஊடு பொருளாகப் பயன்படத்திகின்றனர். தொன்மங்கள் மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தவை. நீ என்ன சீதையா? அவ என்ன பாஞ்சாலியா? அவன் அரிச்சந்திரன் வீட்டுக்குப் பக்கத்து விட்டுகாரன் எனற தொன்மச் சொற்றொடர்கள் நாம் அன்றாட வாழ்வில் பயன்படுத்துபவை. ஜெயமோகன் இந்தியத் தத்துவச் சிந்தனைகளையும் பழமரபுக் கதைகளையும் தன்னுடைய படைப்புகளில் பல இடங்களில் எடுத்தாண்டுள்ளார். தொன்மைக் கோட்பாட்டு அடிப்படையில் ஜெயமோகனின் படைப்புகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

தொன்மம் என்பது சமயத்தோடும், நாட்டுப்பாடலிருந்த மானிட இயலோடும், சமூக இயலோடும் உளவியல் நுண்முறை அறிவோடும் (psychoanalyses) நுண்கலையோடும் தொடர்புகொண்டு பலவகைப் பொருள் உணர்ந்து பொதிந்திலங்கும் செறிவுமிக்க ஒரு சொல்லாகும். (**ப** -126. **உளவியலும் தொன்மவியலும்**, **திறனாய்வு அணுகுமுறைகள்**-2011.)

தொன்மம், பழமரபுக்கதை, தேவதைக்கதை ஆகியன நாட்டுப்புற இயலின் முப்பரிமாணப் பிரிவுகளாக விளங்குகின்றன. எனினும் இப்பிரிவுகள் முற்றிலுமாகத் தனித்தவை அல்ல .தொன்மக்கூறுகள் தேவதைக்கதையிலும், பழமரபுக் கதையிலும் இடம் பெறலாம். தொன்மம் என்பது புனிதமான உண்மை (sacred truth) பழமரபுக்கதை என்பது அணி செய்யப்பட்ட வரலாறு (adorned history) தேவதைக்கதை என்பது சாதாரண புனைகதை என்று விளக்கமளிக்கிறது அமெரிக்கானா கலைக்களஞ்சியம்.மேலும் செயற்பாட்டின் அடிப்படையில் தொன்மம் என்பது சடங்குகளுடனும் சமயங்களுடனும் தொடர்புடைய சமுதாயம் சார்ந்த கதை என்று வரையறுக்கும் கலைக்களஞ்சியம் (**ப**-48-49 **தொன்மவியல் கட்டுரைகள்**- **யாழ்**.**சு**.**சந்திரா**.-2009)

**தொன்மக் கோட்பாடுகளும் மகாபாரதக்கதைகளும்**

தொன்மங்கள் மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிணைந்திருப்பவை. மக்களின் வாழ்க்கை சூழல் மாறும்பொழுது தொன்மங்கள் மறுபடைப்பாக்க நிலையை எட்டுகின்றன. அன்றன்றிருந்த வாழ்க்கைச் சூழலுக்கேற்ப தொன்மங்களும் மாறிக்கொண்டே செல்கின்றன. பலமாற்று வடிவங்களைப் பெறுகின்றன. மகாபாரதம் மாபெரும் பழமையான இலக்கியம் தொன்மையானது. தன்னுடைய வடிவத்தை மாற்றிக்கொண்டும், புதிய வடிவத்தை உருவாக்கிக் கொண்டும் நிலை பெற்றிருக்கின்றன. ஆசிரியர் ஜெயமோகன் மகாபாரதத்தை பல வடிவங்களில் விரித்து எழுதியுள்ளார். இச்சிறுகதைத் தொகுப்பில் திசைகளின் நடுவே, நதிக்கரையில், விரித்த கரங்களில் இம் மூன்று கதைகளும் மகாபாரதத்தைப் பற்றியதாகும்.

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்குமான யுத்தத்தில் இருபக்கத்திலும் உயிர்சேதம் நிகழ்ந்தது. பாண்டவர்கள் வெற்றி பெற்றனர். கௌரவர்கள் உயிரிழந்தனர் என்பது மகாபாரதம் சொல்லும் செய்தி. பாண்டவர்களின் இவ்வெற்றி உண்மையான வெற்றியா? கௌரவர்களின் தோல்வி உண்மையான தோல்வியா என்ற கேள்விகள் ஆசிரியரின் மனதில் படிமங்களாகப் படிந்திருக்கின்றன எனலாம். அவை குறித்த செய்திகளை மீட்டுருவாக்கம் செய்து சிறுகதைகயும், புதினங்களாகவும் படைப்பாக்கம் செய்துள்ளார். திசைகளின் நடுவே சிறுகதையில் ஆசிரியர் விரிவாக்கத்தின் முன் பல கேள்விகளை வைக்கிறார். நாளை கிருஷ்ண துவைபாயனின்மகா கவித்துவத்தில் இது விண்ணெட்ட உயரும். தலைமுறை ஞாபகங்களில் தொடரும். தழைக்கும் காலத்தின் வேரில் இருந்து, கிளை நுனிகள் தோறும் கொடி வீசப்படரும்". (**ப –** 150) குருசேத்திரப்போரில் கௌரவர்களும் பாண்டவர்களும் போர் புரிந்தனர். கிருஷ்ண துவைபாயனன் பாண்டவர்களுக்கு உதவி செய்தவன். ஆனால் தலைதலைமுறையாக கிருஷ்ணனின் புகழ் பாடப்படுகிறது. கடோத்கஜனும், கர்ணனும் சூதர்களின் பாடல்களில் இடம் பிடிக்கவில்லை. "அந்தச் சூதர்களிடம் அவர்களுடைய பாடலில் கடோத்கஜன் என்ற பெயர் ஏன் உச்சரிக்கப்படவில்லை என்று கேளுங்கள். ராதேயன் கர்ணனை ஏன் அவர்கள் பாடவில்லை என விசாரியுங்கள்" (**ப –** 150) என்கிறார் ஜெயமோகன். மேலும் அந்தப் போரில் பல்லாயிரக் கணக்கான வீரார்கள் கொல்லப்பட்டனர். அவர்களின் பெயர்களை வியாசன்

பட்டியலிடுவானா என்று கேள்வி எழுப்புகிறார். அக்கேள்விகளின் வினாவாக மகாபாரதக் கதையை மீட்டுருவாக்கம் செய்திருக்கிறார் எனலாம். தருமன் அரசனாக முடிசூடிக் கொள்ள லட்சக்கணக்கான வீரர்கள் தங்கள் உயிரைப் பலி கொடுத்தனர். மேலும் முடிசூட்டிக் கொண்ட அன்று அனைவருக்கும் தானம் வழங்குகிறார். ஆசரிரியர் அங்கதத்துடனும் ஆதங்கத்துடனும் இக்காட்சியை வருணித்துள்ளார். "முடிசூட்டிக் கொண்ட தருமன் இன்று இரவலர்களுக்கும், பிராமணர்களுக்கும், ரிஷிகளுக்கும், பண்டிதர்களுக்கும் அள்ளி வழங்குகிறான். இன்று அவன் களஞ்சியத்தையே காலி செய்துவிட வேண்டும். மீண்டும் நிரப்பத்தான் சூத்திர ரத்தம் வயல் வெளிகளில் பாய்ச்சப்படுகிறது (**ப** - 155). இதுபோன்ற செய்திகளை பல இடங்களில் பதிவு செய்துள்ளார். இக்கதையில் வரும் சார்வாக்களை தருமனிடம் நாணயங்களை வாங்கித் தரையில் கொட்டுகிறான். ஏன் என்று கிருஷ்ணன் கேட்டதற்கு அவன் கூறுகிறான் அவற்றில் உதிரவாடை வீசுகிறது (**ப** - 159) யுத்தத்தின் தீவிரத்தை தொல்படிவத்தின் துணை கொண்டு ஆசிரியர் விளக்குகிறார்.

நதிக்கரையில் என்ற சிறுகதையும் யுத்தத்தின் நாசத்தையும் விளைவுகளையும் வருணிக்கிறது. இச்சிறுகதையில் பீமன், தருமன், பாஞ்சாலி, காந்தாரி, திருதராட்டிரன், வியாசர் ஆகிய மகாபாரதப் பாத்திரங்களைக் கொண்டு இச் சிறுகதை படைக்கப்பட்டிருக்கிறது. அதில் திரதராட்டிரன் வியாசரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்கிறான். இந்தப் பேரழிவின் கதையைத் தாங்கள் ஏன் எழுத வேண்டும்? உங்கள் உதிரத்தில் பிறந்த குழந்தைகள் காமக்குரோத மோகங்களினால் சண்டையிட்டு அழிந்தன எழுதுவதில் உங்களுக்கு என்ன பெருமை (**ப** - 3342) மகாபாரதம் எனும் தொன்மை இலக்கியம் பல பாடங்களை மனித மனங்களின் உளவியலை பல பாத்திரங்களின் தன்மையை, அனுபவங்களை உபதேசங்களை அளித்துள்ளது என்று பரப்பப்பட்டுள்ளது. ஆனால் மகாபாரதம் விளக்குவது மனிதனின் பேராசையை, பேரழிவின் உச்சத்தை என்பதை ஜெயமோகன் பல இடங்களில் பதிவு செய்துள்ளார். வியாசரின் கூற்று வாயிலாக இதனைத் தெரிவிக்கிறார். எங்கும் மக்கள் இந்தப் போரைப் பற்றியே பேசுவதைக் கண்டேன். சூதர்கள் பாடல் முழுக்க இப்போர் பரவி வளர்வதை அறிந்தேன். நாம் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் இந்தப் போர் மானுடல குலத்தினர் ஞாபகத்தில் என்றென்றும் இருக்கத்தான் போகிறது, ஏன்? இந்தப்போர் ஒவ்வொரு மானுடர் மனத்திலும் நிகழும் போர் அல்லவா.?. (**ப** - 334).

இன்று உலகமெங்கும் போர் மேகங்கள் சூழ்ந்திருகின்றன. இந்தப்போர் குறித்த பயங்களும் வேதனைகளும் மனிதர்களின் படிமமாகப் படிந்து கிடக்கின்றன. இந்தப் பயத்தைக் கலைஞர்கள், படைப்பாளர்கள் தம்முடைய படைப்புகளின் வழி காலம் காலமாக கடத்தி வருகிறார்கள். அவ்வகையில் படைப்பாளர் ஜெயமோகன் யுத்தத்தின் நாசத்தை தீவிரத்தைச் சொல்வதற்கு மகாபாரதத் தொன்மை இலக்கியத்தைக காலமாக அமைத்;துக் கொண்டிருக்கிறார். இதிகாசங்கள் குறித்து ஜெயமோகனின் பதிவு வியாசர் கூறுகிறார். காவியத்தில் நாம் பார்ப்பது வானைப் பிரதிபலிக்கும் மேற்பரப்புகள் மட்டுமே. ஆழத்தில் இருண்ட பிரம்மாண்டங்கள் விரிந்து கிடக்கின்றன. அங்கு சககோடி மானிடர் உறைகின்றனர். அவர்களுடைய கூறப்படாத துக்கங்கள் பகிரப்படாத கனவுகள். அங்கு எந்த ஒளியும் சென்று சேர்வதில்லை. காலத்தின் விரல்நுனி அங்குத் துயில்பவர்களை ஒருபோதும் தீண்டப்போவதில்லை. காவிய ஆழம் ஓர் உவமையின் பின்னனி கூட வழி தவறிச் செல்ல முடியாத பேயிருள்" (**ப –** 346 **நதிக்கரையில்**) விரித்த கரங்களில் என்ற சிறுகதையில் மகாபாரதம் என்னும் தொன்மை இதிகாசத்தின் மறக்க இயலாத பாத்திரங்களான ஜயத்ரதன் , அவர் தந்தை பிருகத்காயன், கண்ணன், அர்ச்சுனன் ஆகி இடம் பெற்றுள்ளனர் . பிருகத் காயனுக்கு ஒரு சாபம் உண்டு. அவர் மகனான ஜயத்ரதனின் தலையை யார் மண்ணில் சாய்க்கிறார்களோ அவர்களின் தலை சுக்கு நூறாகச் சிதறி விடும். என்பது தொன்மக்கதை.இக்கதையை அடிப்படையாகக் கொண்டு விரித்த கரங்களில் சிறுகதை புனையப்பட்டுள்ளது. ஜயத்ரதனின் சிரம் தந்தையிடம் பேசுகிறது, " என் வாழ்வைத் திரும்பிப் பார்க்கிறேன். திரௌபதி மீது காமம் , பார்த்தன் மீது குரோதம் , சுயோதனின் மண் மீது தீராத மோகம் .மூன்று தாகங்களால் முடிவில்லாமல் பாலை மீது துரத்தப்பட்ட எளிய மிருகம். " ( **ப**-416) ஜயத்ரதன் தன்னைப்பற்றி சுயவிமர்சனம் செய்து கொள்கிறான். பின் தந்தையிடம் ஒரு கேள்வி எழுப்புகிறான் . " யாரிடமுள்ளது என் ஆத்மாவில் பதிந்துள்ள இந்த வி~ அம்பின் வில்? அவனும் அழிய வேண்டும் .அந்த மூல காரணமும் துளி கூட மிச்சமின்றி அழிய வேண்டும்" (**ப**-416) அர்ச்சுனன் அம்பு விடத் தயங்கும் பொழுதெல்லாம் கண்ணன் அவனை

ஆவேசமூட்டி அம்பு விடச் சொல்லி ஏவுகிறான். இறுதியில் பிருகத்காயன் தன் மகனின் சிரத்தை மண்ணில் இறக்க வைக்க வேண்டியவன் தான்தான் என்பதை உணர்ந்து கொள்கிறான். பாண்டவர் கௌரவர் அனைவர் மனதிலும் கொழுந்து விட்டு எரிகிறது நெருப்பு .அந்த நெருப்பை அணைய விடாமல் பார்த்துக் கொள்கிறான் கண்ணன் என்று கதையை நிறைவு செய்கிறார் ஆசிரியர். மனிதமனத்தின் புதிர்களையும் சிக்கல்களையும் அவற்றை அவிழ்க்கும் உத்திகளையும் வாசகர் முன் படைத்துள்ளார் ஜெயமோகன்.

மகாபாரக் காவியத்தின் ஆழத்தை அறிய ஜெயமோகன் விரும்புகிறார். எனவே அதன் பல்வேறு கோணங்களையும் பல்வேறு அணுகுமுறைகளில் அலசி ஆராய்கிறார் எனலாம்.

**சிவன் தொன்மம் - மாற்றமும் உருவாக்கமும்**

சிவன் சிந்து சமவெளி நாகரிகத்தின் வழிபடு தெய்வம் மொகஞ்சதரோவில் கண்டெடுக்கப்பட்ட இலச்சினை ஒன்றில் உள்ள உருவம் பசுபதி வடிவம் - என்கிறார் சர் ஜான் மார்சன் ( ப-87-வரலாற்று நோக்கில் சங்க இலக்கியப் பழமரபுக் கதைகளும் தொன்மங்களும்) மேலும் மறைமலையடிகள் கூறுவதாவது, சிவன் என்னும் பெயர் இவ்விந்திய நாட்டின் வடமேற்கேயிருந்த பண்டைத்தமிழர்களால் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னமே ஆக்கப்பட்டு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளுக்குரிய சிறப்புப் பெயராக வழங்கப்பட்ட பான்மை தெளியற்பாற்று ( ப-87- மேலது புத்தகம் ). இக்கூற்றுகளிலிருந்து அறியப்படுவது சிவன் மிகப் பழங்காலத்திலிருந்தே வழிபடுந் தெய்வமாக ஆக்கப்பட்டவர் சங்க இலக்கியங்களில் சிவன் சிவனென்ற பெயரால் குறிப்பிடப் படவில்லை.ஆதிரையான் ஆலமர் செல்வன், ஆனேற்றுக் கொடியுடையான் . ஈசன் . ஈர்ஞ்சடை அந்தணன் , காலக்கடவுள் , தாழ்சடைப் பெரியோன் , நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன் , மணிமிடற்றன், முக்கட்செல்வன் என்ற பெயர்களால் குறிப்பிடப்படுகிறார். .சிவன் திரிபுரம் எரித்த கதை சிவபெருமான் குறித்த தொன்மக் கதைகளில் மிக முக்கியமானது ஆகும இக்கதை சங்க இலக்கியங்களிலும் காப்பியங்களிலும் பல இடங்களில் சுட்டப்பட்டுள்ளது.

**ஒரு கணை கொண்டு மூவெயிலுடற்றி** ~ ( **புறம்** :55-1-4 )

**மடங்கல் போல் சினைஇ மாயஞ்செய் அவுணரைக் கடந்தரு முன்பொரு**

**முக்கண்ணான் மூவெயிலும்**~ ( **கலி**-2:2-4)

திரிபுரம் எரித்தபின் என்ன நடந்தது என்பது தொன்மக் கதையாக நச்சரவம் சிறுகதையில் விளக்கப்பட்டுள்ளது. முப்புரம் எரித்து அதன் வெம்மை அடங்காமல் வந்து அருவிக்கரையில் தன் புலித்தோலை சிவபெருமான் அவிழ்த்து வைத்தார் . அங்கு முளைத்த லிங்கம் இது இந்த சிவலிங்கம் கிராதமூர்த்தி என்று அழைக்கப்படுகிறது. (**ப**-585-**நச்சரவம்**) கிராதன் என்றால் வேடன் . காட்டுமிராண்டி , வனவாசி என்ற பொருளும் உள்ளது என்று ஜெயமோகன் பதிவு செய்துள்ளார் . மேலும் கிராதமூர்த்திக்கான தொன்மைக்கதையையும் விளக்குகிறார் . பாசுபத அஸ்திரம் தேடிப்போன அர்ச்சுனனை சிவன் கிராதனாக வந்து வழிமறித்துப் போரிட்டுப் பிறகு பாசுபதம் அளிக்கும் கிராதவிருத்தம் என்ற கதகளி ஆட்டத்தை இங்கு ஒவ்வொரு வருடமும் போட்டாக வேண்டும் என்ற நடைமுறை விதி உள்ளது. (**ப**-585) சிவலிங்கம் , சிவன் , கிராதமூர்த்தி என்பது குறித்து நுட்பமான பதிவுகறைளக் கூறிய பிறகு மலையன் என்ற ஒரு பாத்திரத்தை அறிமுகம் செய்கிறார் .கிராதமூர்த்தியின் ஆதி வடிவம் தேடிச் செல்கிறார் இச்சிறுகதையின் ஊடாக. இறுதியில் சிவன்தான் மலையன் , மலையன்தான சிவன் என்ற உண்மையைக் கண்டடைகிறார் .இச்சிறு கதையின் வழி ஜெயமோகன் சிவன் என்னும் தொன்மையான உருவத்தின் மூலம் மனிதன் .மனிதனின் ஆற்றல்மிகு வடிவம் சிவன் என்பதைப் புலப்படுத்தியுள்ளார் . மூப்பன் அசையவில்லை. ஆனால் நான் அவருக்குச் சற்றுப் பின்னால் அந்தக் குரலைக் கேட்டேன். நான்தான் அக்கணத்தில் மலையன் கழுத்தில் போட்டிருந்த அழுக்குத் துண்டு படமெடுத்து மணிக்கண்களையும் இரட்டை நாக்கையும் காட்டிச் சுறியது. (**ப**-596-**நச்**). சிவன் குறித்த தொன்மக் கதைகள் மனிதர்களின் கூட்டு முயற்சியால் உருவானவை. நம்முடைய ஆதித்தமிழனின் உருவமும் , ஆற்றலும் , செயல்களும் சிவனென்னும் தொன்மங்களாக உருவாகியிருக்கலாம். என்ற எண்ணத்தின அடிப்படையில் ;நச்சரவம் ; சிறுகதை உருவாகியிருக்கிறது. கொற்றவை புதினத்தில்

சிவன் என்னும் தொன்மம் ஆதித்தமிழனால் உருவாக்கப்பட்டது என்பதை ஆசிரியர் விளக்கியுள்ளார் . குமரிக்கோட்டின் பன்மலை அடுக்கத்துக் குகை வாயில் ஒன்றில் அமர்ந்து பார்த்திருந்தான் ஒருவன். புலித்தோலாடை அணிந்து , குளிருக்கு யானைத்தோல் உரியைப் போர்த்தியிருந்தான்.ஒரு கையில் தன் ஆயுதமான கல்மழுவும் மறுகையில் குடி அடையாளமான மான்குறியும் வைத்திருந்தான். ஒளி கண்ட இடம் நோக்கி பருப்புப் புகையெனப் படையெடுக்கும் பூச்சிகளில் இருந்து தப்ப உடம்பெங்கும் சாம்பல் பூசியிருந்தான் .அவனது கனத்த சடைமயிர் தோளில் விழுந்து கிடந்தது. கருநிற இமைகளும் வெண்ணிறப் படலத்தில் நீல மைய விழியுமாக வரையப்பட்ட ஒரு பொய்விழி நெற்றியில்.அது அப்பழங்குடியின் தொன்மையான வேட்டை உத்தி .பிறகு அது வழக்கமும் அடையாளமும் ஆயிற்று. (**ப**-15-**கொற்றவை-ஜெயமோகன்**-2020). சிவனின் உருவத்தோற்றத்திற்கான முழு வருணனைகளையும் ஏன் சிவனின் தோற்றம் இவ்வாறு இருக்கிறது என்பதற்கான காரணங்களையும் இப்புதினத்தில் கூறியுள்ளார் ஆசிரியர்.

**கேரளத் தோற்றத் தொன்மம்**

தோற்றத் தொன்மங்கள் உலகம் எப்படித் தோன்றியது என்பதிலிருந்து, மானுடப் பிறப்பு வரை கூறுகின்றன. பல்வேறு மதங்களில் பண்பாடு மற்றும் இனம் எவ்வாறு தோன்றியது என்பது பற்றிய தொன்மக் கதைகள் அதிகம் இடம் பெறுகின்றன. இவ்வாறு தோற்றத் தொன்மங்களை மூலத் தொன்மங்களாகக் கொள்ள இடமுண்டு (**ப**-34-**யாழ்.சு.சந்திரா** -**தொன்மத் திறனாய்வு** , 2009) . கேரளம் தோன்றிய வரலாறு குறித்த ஒரு தொன்மத்தை ஜெயமோகன் கூறியுள்ளார். இந்த கேரளத்து மண்ணை பரசுமனாக்கும் மழு எறிஞ்சு உண்டாக்கினது .ஏன் ?அடியன் கேட்ட கதை இதாக்கும். மழுவோட பரசுராமன் தெக்கே வந்தப்ப அங்க ஒரு யானைக் குட்டி காய்ஞ்ச சருகைப் பொறுக்கி தின்னுகிட்டிருந்ததைப் பார்த்தாரு .என்ன மக்கா , உனக்கு பச்சைப் புல்லு இல்லியான்னு கேட்டாரு . எனக்கு மேயக் காடில்லேன்னு அது சொல்லிச்சு. உனக்கு நான் தாறேன் பச்சை மாறாத மண்ணுன்னு சொல்லிட்டு அவரு கோகர்ணத்திலே ஏறி நின்னு கடலைப் பார்த்தாரு .மழுவை தூக்கி அந்தாலே வீசினாரு .அது போயி விழுந்த இடம்வரை கடலு பின் மாறி இந்தக் கேரளத்து மண்ணு உண்டாச்சு (**ப**-192-**முதுநாவல் –ஜெயமோகன்** -2022) கிரேக்க, சுமேரிய, இந்தியத் தொன்மங்களில் உள்ள ஒற்றுமை இவையனைத்திலும் கடல் இடம் பெற்றுள்ளது.

**இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்**

தொன்மம் பற்றிய நார்த்தா ஃப்ரை யின் கருத்து அது இயற்கை இறந்த நிகழ்ச்சிகளைத் தன் சொல் முறையாகக் கொண்டிருக்கும். ஜெயமோகன் தன்னுடைய படைப்புகளில் பல இடங்களில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகளைப் பதிவு செய்துள்ளார். படுகை என்ற சிறுகதை வள்ளி ஆறு ஒரு பெண்ணாக ஒரு ஆங்கிலேய அதிகாரி அந்த ஆற்றை அடக்க வந்த ஒருவராகவும் உருவகம் செய்துள்ளார் .அவ்வாறு செய்கையில் பேச்சி என்ற தொன்மத்தை இடையில் ஊடாட விடுகிறார் . பயந்து போன வள்ளி பேச்சி முன் சென்று புலம்பினாள். கோபம் கொண்ட பேச்சி காட்டுக்குள்ளே செம்பன்துரையை வழிமறித்தாள். யானைகளைக் குண்டலமாய், மலைப்பாம்பை மலைவடமாய் அணிந்து ,மலை மேலே கால் வைத்து, மேகத்திலே தலை வைத்து கொடும் பல்லும் , விஷ நாக்கும் , கனல் கண்ணும் , இடிச்சிரிப்புமாய், விஸ்வரூபம் கொண்டு நின்றாள்.( **ப**-58-**ஜெயமோகன்**-2011) வனப்பேச்சி , யட்சி , இயக்கி என்ற பெயர்கள் கொண்ட இயற்கைத் தெய்வங்கள் , தாய்த்தெய்வங்கள் தம்முடைய நாட்டையும் மண்ணையும் , காட்டையும் சனங்களையும் காப்பாற்ற சினம் கொண்டு எழுகின்றன என்பதை ஆசிரியர் விளக்கியுள்ளார் எனலாம். பேச்சி என்பவள் யார் என்பதற்கான விளக்கமும் அளிக்கிறார். மலையரசி பேச்சி நாடு காக்கும் தெய்வம் . நோய் தீர்;க்க மருந்தும் நோம்புக்கு வாசனையும் தந்து ரட்சிப்பவள். காட்டு மிருகங்களும் காணிக்காரர்களும் அவள் பிள்ளைகள் ( **ப**-59-**ஜெயமோகன்**-2011).

**தொன்மக் கோட்பாட்டு நோக்கில் சிலப்பதிகாரத் தொன்மம்**

சிலப்பதிகாரக்கதை தொன்மக் கதையாகச் சங்ககாலம் முதல் தமிழகம் முழுவதும் பரவியிருந்தது. பேகன் என்ற அரசன் தன்மனைவியை விட்டுப் பிரிந்து வேறொரு பெண்ணுடன் வாழ்ந்து வந்தான் இதைக்

கண்ட மனைவி வருந்தி அழுகிறாள். இதனைக் கண்ட புலவர்கள் அரசனிடம் முறையிடுவதாக அமைந்த பாடல்கள் புறநானூற்றில் உள்ளன.மேலும் நற்றிணையில்

**எரிமருள் வேங்கைக்கடவுள் காக்கும்**

**குருகார் துழனியின் இதணத்து ஆங்கண்**

**ரதிலாளன் கவலை கவற்ற**

**ஒரு முலை அறுத்த திருமா உண்ணி** ( **நற்றிணை** -216-6-9)

இம்மாதிரியான கதைகள் இலக்கியங்களில் பரவிக்கிடக்கின்றன என்பதை தொன்மத்திறனாய்வு என்ற புத்தகத்தில் பஞ்சாங்கம் விளக்கியுள்ளார் .( ப-67-69 -பஞ்சாங்கம் -2011) ஜெயமோகன் தன்னுடைய கொற்றவை என்ற புதினத்தில் கண்ணகி குறித்த தொன்மக்கதைகள், பிற தொன்மக்கதைகள் , செவி வழி கேட்டவை , நாடகங்களாகப் பார்த்தவை போன்ற அனைத்தையும் புதினத்தில் பதிவு செய்துள்ளார்.

குலப்புகழ் சேர்க்கும் திருமாபத்தினி இவள் என்றார் பூசகர்.அன்னையின் பெயரன்றி எப்பெயருமே இவளுக்கு உகக்காது .கண்ணையின் அருள்நகை பெற்ற இவள் பெயர் கண்ணகை ( **ப**-69- **கொற்றவை** -2020) இவ்வாறு ஆரம்பிக்கும் காப்பியம் ~சுற்று விளக்குகளும் அடுக்கு விளக்குகளும் தூக்கு விளக்குகளும் சுடர் மலர்ந்து நிற்க நடுவே பொன்னொளி சுடர்வளையமும் பொன்முகமும் பொற்காப்பும் மணித்தாலிகளும் தகதகக்க மாமங்கலை வீற்றிருந்தாள் ( **ப**-585- **கொற்றவை** -2020) என்று முடிவடைகிறது.

**முடிவுரை**

ஆசிரியர் மகாபாரக்கதைகளை தம்முடைய சிறுகதைத் தொகுப்பிலும் புதினத் தொகுப்பிலும் பல இடங்களில் மீட்டுருவாக்கம் செய்திருக்கிறார் .அன்றைய போர்ச்சூழலை இன்றைய நிகழ்வுடன் பொருத்திக் காட்டியுள்ளார் .மக்களின் மனங்களில் புதைந்து கிடக்கும் மகாபாரதக் கதைகளை நிகழ்காலத்துடன் பொருத்தி மறுவடிவம் கொடுத்துள்ளார் எனலாம். சிவன் குறித்த தொன்மங்களை விவாதத்திற்கு உட்படுத்தியுள்ளார்.ஆதித்தமிழனின் வடிவம் தான் சிவனின் வடிவமாக மாற்றம் பெற்றுள்ளது என்பதை தம்முடைய படைப்புகளில் பதிவு செய்துள்ளார்.கேரளம் உருவான கதையைப் பதிவு செய்துள்ளார். ஆசிரியரின் படைப்புகளில் பல இடங்களில் இயற்கை இகந்த சிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. ஒரு முலை இழந்த திருமாவுண்ணி எப்படி கண்ணகையாக தோற்றம் பெறுகிறாள் என்பதைப் பதிவு செய்துள்ளார். ஆசிரியர். ஜெய மோகனின் படைப்புகளில் தொன்மக் கதைகள் நிறைந்திருக்கின்றன.

**குறிப்புதவி நூல்கள்**


1. தொன்மத்திறனாய்வு. முனைவர்.க.பஞ்சாங்கம் அன்னம் , தஞ்சாவூர். ,2011
2. தொன்மக்கட்டுரைகள், முனைவர் யாழ் சு.சந்திரா, அறிவு பதிப்பகம், சென்னை
3. தொன்மம், கதிர்மகாதேவன், 1989
4. ஜெயமோகன் குறுநாவல்கள், ஜெயமோகன், கிழக்குப்பதிப்பகம்,சென்னை.2011
5. ஊமைச்செந்நாய், ஜெயமோகன், கிழக்குப்பதிப்பகம், சென்னை.2016
6. கூந்தல், ஜெயமோகன் , விஷ்ணுபுரம் பதிப்பகம் , கோயம்புத்தூர் , 2022
7. சிற்பம்தொன்மம் , செந்தீ நடராாசன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை , 2016